# RTX ஊழியர் தனியுரிமை அறிக்கை

இந்த தனியுரிமை அறிவிப்பானது, Raytheon Technologies Corporation மற்றும் அதன் கட்டுப்படுத்தப்பட்ட கூட்டு முயற்சிகள், கூட்டாண்மைகள் மற்றும் Raytheon Technologies Corporationஅதன் கட்டுப்பாடு அல்லது பயனுறு நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள இடங்களிலான வர்த்தக ஏற்பாடுகள் உள்பட, நிறுவனத்தின் வர்த்தகப் பிரிவுகள், அலகுகள் மற்றும் அமைந்துள்ள இடங்களில் உள்ள பிற கட்டுப்பாட்டு நிறுவனங்கள் (ஒட்டுமொத்தமாக “RTX” அல்லது “நாங்கள்”) - எவ்வாறு ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கவும், செயலாக்கவும், பரிமாற்றவும், பகிரவும் மற்றும் தக்கவைக்கவும் செய்கின்றன என்பதை விவரிக்கிறது. ஊழியரின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கு RTX கடமைப்பட்டுள்ளது. “தனிப்பட்ட தகவல்கள்” என்பது பற்றி **RTX பெறுநிறுவனக் கொள்கைக் கையேடு பிரிவு 24** - இல் வரையறுக்கப்பட்டுள்ளது.

RTX -இன் நடைமுறைகள் மற்றும் கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்குத் தேவையான வகையில் இந்த அறிக்கை அவ்வப்போது திருத்தப்படலாம். அத்தகைய திருத்தங்கள் குறித்த அறிவிப்பானது privacy.utc.com -இல் இடுகையிடுவதன் மூலம் தெரிவிக்கப்படும். இந்த இணையதளத்தின் அணுகல் இல்லாத ஊழியர்கள், தங்களின் மனிதவளத் துறையின் (“HR”) பிரதிநிதியிடம் இருந்து அறிவிப்பின் நகலைப் பெறலாம். மேலும், இந்த அறிக்கையில் மாற்றங்களைச் செய்யும் போது ஊழியர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்குத் தேவையான முயற்சிகளை RTX செய்திடும். இந்த அறிக்கை RTX -இன் உலகளாவிய ஊழியர்களை உள்ளடக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள நடைமுறைகளில் சில உங்களுக்குப் பொருந்தாமல் இருக்கலாம். சட்டத்தால் தேவைப்படக்கூடிய இடங்கள் உள்ளூர் அல்லது பிராந்திய நடைமுறைகளைப் பிரதிபலிப்பதற்காக இந்த அறிக்கையுடன் கூடுதலாக ஓர் அறிக்கை வழங்கப்படலாம்.

**RTX, அதன் ஊழியர்களிடம் இருந்து என்னென்ன தனிப்பட்ட தகவல்களைப் பெறலாம்?**

உங்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது முந்தைய பணி நிறுவனங்கள், ஆட்சேர்ப்பு நிறுவனங்கள், பொதுப் பதிவு ஆதாரங்கள் மற்றும் பிற மூன்றாம் தரப்பினர்கள் போன்றவர்களிடம் இருந்து மறைமுகமாகவோ RTX உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பெறலாம். RTX சேகரிக்கின்ற தனிப்பட்ட தகவல்கள் உள்நாட்டுச் சட்டம் மற்றும் ஊழியர் பிரதிநிதி ஒப்பந்தத் தேவைகளுக்கு இணங்க இருக்கும்.

கீழேயுள்ள பட்டியல் அனைத்து RTX ஊழியர்களுக்கானது என்பதால், இங்குக் கொடுக்கப்பட்டுள்ள தரவு உட்கூறுகள், உங்களின் குறிப்பிட்ட சூழலுக்குப் பொருந்தாததாக இருக்கலாம். ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், உங்கள் HR பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

- கொடுக்கப்பட்ட பெயர், குடும்பப் பெயர், நடுப்பெயர் மற்றும் (ஜூனியர் அல்லது சீனியர் போன்ற பின்னொட்டுகள்) உள்ளிட்ட பெயர்
- ஊழியர் அடையாள எண், வரி அடையாள எண், சமூகப் பாதுகாப்பு/காப்பீட்டு எண் அல்லது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், விசா, பாஸ்போர்ட் போன்ற பிற அடையாள எண் அல்லது அட்டை அல்லது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பிற ஆவணம் போன்ற அடையாள எண்கள் (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ)
- தொலைபேசி எண், தொலைநகல் எண், மின்னஞ்சல் முகவரி, பேஜர் எண், அஞ்சல் முகவரி மற்றும் பணியிடம் உள்ளிட்ட பணி அடையாளத் தகவல்
- வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசி எண், தனிப்பட்ட மொபைல் எண்கள் மற்றும் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிகள் உள்ளிட்ட வீட்டுத் தொடர்புத் தகவல்கள்
- பிறந்த தேதி மற்றும் பாலினம் போன்ற அடிப்படை அடையாளத் தகவல்
- பணி அனுபவம், கல்வி மற்றும் பணி வரலாறு, மொழித் திறன்கள், பிற திறன் வகைப்பாடுகள், உரிமங்கள், சான்றிதழ்கள், விருதுகள், வர்த்தகக் கூட்டமைப்பு அல்லது தொழில்முறை நிறுவனங்களிலான உரிமைத்துவம் மற்றும் பங்கேற்பு மற்றும் குறிப்பிட்ட பணியை மேற்கொள்வதற்கான அதிகாரங்கள்

Raytheon Technologies

- உங்கள் பணிநிலை, துறை, பணிச் செயல்பாடு, பணி வகை, பணி வகைப்பாடு/தரநிலை, பணி ஒப்பந்தம் மற்றும் செலவு மையம் உள்பட உங்கள் பணி குறித்த தகவல்
- உங்கள் நிறுவனத்தின் பெயர், நிறுவனம் அமைந்துள்ள இடம் மற்றும் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ள நாடு போன்ற உங்கள் பணி நிறுவனம் குறித்த தகவல்கள்
- உங்கள் மேற்பார்வையாளர் அடையாளம், உதவியாளர் மற்றும்/அல்லது நேரடி அறிக்கையாளர்கள் உள்பட நிறுவனத் தகவல்கள்
- புகைப்படம் மற்றும் குறிப்பிட்ட இடங்களை நீங்கள் அணுகுவதற்குத் தேவையான அனுமதி உள்பட பேட்ஜ்களுக்கு தேவையான தகவல்கள்
- ஊதியம் மற்றும் உங்கள் பயனாளிகள் மற்றும் சார்ந்துள்ளவர்களின் (பெயர், பிறந்த தேதி, பாலினம், அரசாங்க அடையாள எண்கள், முகவரி மற்றும் தேவையான பிற தகவல்கள் போன்ற) அடையாளத் தரவு மற்றும் குறிப்பிட்ட நலன் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளிட்ட நலன்கள் குறித்த தகவல்கள்
- பயிற்சி, கூடுதலாகக் கற்கும் கல்வி , மேம்பாடு மற்றும் செயல்திறன் மறுஆய்வுத் தகவல்கள்
- பொறுப்பு மாற்றத்துக்கான திட்டமிடல் தகவல்கள்
- RTX கணினி, பிணையம் மற்றும் தகவல்தொடர்புத் தகவல்கள் மற்றும் நிறுவனத்தின் தொலைபேசிகள், கணினிகள், (மின்னஞ்சல் மற்றும் மின்னணு நாட்காட்டிகள் போன்ற) மின்னணுத் தகவல் தொடர்புகளின் பயன்பாட்டை உள்ளடக்கும் பதிவுகள் மற்றும் பயனர்பெயர்/ உள்நுழைவு அடையாளம், கடவுச்சொற்கள், பாதுகாப்புக் கேள்விகளுக்கான பதில்கள் போன்றவை உள்ளிட்ட பிற தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் RTX பயன்பாடுகள், பிணையங்கள், அமைப்புகள் மற்றும் சேவைகளை அணுகுவதற்குத் தேவையான பிற தகவல் மற்றும் நீங்கள் RTX -யின் பிணையங்கள் மற்றும் அமைப்புகளின் மூலம் சேமிக்கின்ற, அனுப்புகின்ற, சமர்ப்பிக்கின்ற அல்லது பெறுகின்ற தகவல்கள்.
- நேரம் மற்றும் பணி ஒதுக்கீடு குறித்த  தகவல்
- உங்களால் உருவாக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் கோப்புகள் மற்றும் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட தகவல்கள் உள்பட உங்களுடன் தொடர்புடைய பணி நியமனங்கள் மற்றும் பணித் தயாரிப்பு
- வருகையாளர் வருகை தந்த நேரம், தேதி மற்றும் வந்து சென்ற இடங்கள், பார்க்கிங் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட  வாகனம் குறித்த தகவல் உள்ளிட்ட வருகையாளர் தகவல்கள் மற்றும் வருகையாளர் பதிவு மற்றும் கண்காணிப்புக்குத் தேவையான தகவல்கள்
- நீங்கள் செல்ல விரும்புகின்ற நிகழ்வு, உணவு விருப்பத் தேர்வுகள் மற்றும் பயண ஏற்பாடுகள் போன்ற நிகழ்ச்சிப் பதிவுத் தகவல்கள்
- பயணம் மற்றும் இடம் போன்ற உங்களின் பணி விருப்பத் தேர்வுகள் குறித்த தகவல்கள்
- மின்னணு அமைப்புகளில் உங்கள் சுயவிவரத்தில் உள்ளடக்குவதற்கு நீங்கள் தானாக முன்வந்து அளித்த புனைப்பெயர், புகைப்படம் மற்றும் ஆர்வங்கள் உள்ளிட்ட இன்னபிற தகவல்கள்
- அவசரகால தொடர்புத் தகவல்கள், இதில் உங்கள் அவசரகால தொடர்பாக நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள குடும்பத்தினர்கள் அல்லது நண்பர்கள் போன்ற ஊழியர் அல்லாதோர்களின் தகவல்களும் இருக்கலாம்
- மனிதவளப் பயன்பாடுகள், ஊதியம், பயணம் மற்றும் செலவு மேலாண்மை போன்றவற்றில் உதவிடும் வங்கி மற்றும் கடன் அட்டைக் கணக்கு போன்றவை உள்ளிட்ட இன்னபிற தகவல்கள்

உள்நாட்டுச் சட்டத்தைச் சார்ந்து, RTX பின்வருவனவற்றையும் சேகரிக்கலாம்:

- பாஸ்போர்ட் தகவல், பிறந்த இடம், (கடந்தகால மற்றும் தற்போதைய) குடியுரிமைகள் மற்றும் வசிப்பிடத் தன்மை
- காது கேட்பு பரிசோதனைகள், மருத்துவப் பரிசோதனைகள், மருந்து மற்றும்/அல்லது மருந்துப் பரிசோதனை மற்றும்/அல்லது பின்னணித் தகவல் பரிசோதனை போன்ற பணி சேர்ப்புக்குத் தேவையான தகுதிகாண் பரிசோதனைகள்
- உடல் இயலாமை, மருத்துவ விடுப்பு, மகப்பேறு விடுப்பு மற்றும் மனித வளம் மற்றும் சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் பாதுகாப்புத் தேவைகளை நிர்வகிக்கத் தேவையான பிற தகவல்கள்
- இராணுவ சேவைத் தகவல்
- புகைப்படங்கள், ஒலி மற்றும் ஒளி அல்லது பயோமெட்ரிக் தகவல்கள் (உதாரணத்திற்கு, விரல்ரேகை, ஐரிஸ் ஸ்கேன் அல்லது குரல் அங்கீகாரம்)

Raytheon Technologies

- புவியிடங்காட்டி (GPS) (தடங்காட்டி எனவும் இது அறியப்படுகிறது) தேவைப்படுகின்ற பயன்பாடுகள் மற்றும் சாதனங்களுக்கான இடத்தகவல்கள்
- குறிப்பிட்ட தொழில்நுட்பங்களுக்கான உங்கள் அணுகலை அனுமதிக்கத் தேவையான பாதுகாப்பு அனுமதி அல்லது சர்வதேச வர்த்தக இணக்க ஒழுங்குமுறைகள் அல்லது உங்கள் பயண வரலாறு, தனிப்பட்ட மற்றும்/அல்லது தொழில்முறைத் தொடர்புகள் மற்றும் உறுதியான தொடர்புகளின் பரிசோதனைக்காக கோரிக்கை செய்யப்படும் பிற தகவல்கள்
- திருமண நிலை, உங்கள் பெற்றோர்களின் பெயர்கள், குடும்பப் பெயர் மற்றும் உங்களைச் சார்ந்துள்ளவர்கள் தொடர்பான தகவல்கள் போன்ற குடும்ப நிலை மற்றும் உறுப்பினர்கள் குறித்த தகவல்கள்
- உள்நாட்டுச் சட்டத்தின் தேவை வரம்புக்குட்பட்ட இனம், மதம் அல்லது அரசியல் கட்சி அல்லது வர்த்தக/தொழிலாளர் சங்கத் தொடர்பு போன்ற பிற தகவல்கள்

(பெருநிறுவனக் கொள்கைக் கையேடு பிரிவு 24, ஆவணம் 1 -இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) உணர்திறன் மிக்க தனிப்பட்ட தகவல்களின் மீது சிறப்புப் பாதுகாப்பை வழங்குகின்ற நாடுகளில், சட்டத்தின் தேவைக்குட்பட்ட இடங்களில் அல்லது உங்களின் வெளிப்படையான ஒப்புதலுடன் தகவலை வழங்குவது விருப்பத்தேர்வாக இருக்கும் இடங்களில், RTX உங்கள் உணர்திறன்மிக்க தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கவோ, செயலாக்கவோ அல்லது பரிமாற்றவோ செய்யும்.

**RTX எந்தெந்த நோக்கங்களுக்காக உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தலாம்?**

- உங்கள் பணியை நிர்வகித்தல், பின்வருபவை உள்ளிட்ட:
  - ஊதியங்கள் மற்றும் நல திட்டங்களின் நிறுவல் மற்றும் நிர்வாகம் உள்ளிட்ட நலன்கள்
  - ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டவை மற்றும் பங்களிப்புகள் போன்ற ஊதிய நிர்வாகம்
  - பணி மேம்பாடு, செயல்திறன் பின்னூட்டம் மற்றும் முன்னேற்றம்
  - வெகுமதிகள் மற்றும் அங்கீகாரம்
  - நேர சேகரிப்பு மற்றும் ஒதுக்குதல்
  - பயணம் மற்றும் பயணம் மற்றும்/அல்லது கடன் அட்டை நிர்வாகம் உள்ளிட்ட செலவு திரும்பச் செலுத்துதல்
  - பயிற்சி
  - இடமாறுதல்கள், பணி நியமனக் கடிதங்கள், புலம் பெயர்ந்த ஊழியர்களுக்கான ஆதரவு, விசாக்கள், உரிமங்கள் மற்றும் பிற பணிக்கான உரிமை அங்கீகாரங்கள்
  - வரி அறிக்கையிடல் மற்றும் வரிப்பிடித்தங்கள்
  - ஊழியர் மற்றும் அதிகாரியின் வாழ்க்கை வரலாறு, பணி வரலாறு மற்றும் இதுபோன்ற பிற தகவல்களின் பராமரிப்பு
  - மின்னஞ்சல் அமைப்புகள் மற்றும் நிறுவன வரைபடங்கள்
- ஊழியர் நியமனம் மற்றும் பொறுப்பு மாற்றத்துக்கான திட்டமிடல்
- பின்வருபவை உள்ளிட்ட பல்வேறு வழக்கமான வர்த்தகச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்:
  - ஆராய்ச்சியில் ஈடுபடுதல்
  - தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்களை வடிவமைத்தல் மற்றும் உருவாக்குதல்
  - ஊதியம், பயணம் மற்றும் செலவுத் தரவு உள்ளிட்ட செலவுகளை பகுப்பாய்தல்
  - வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தகப் பங்காளிகளுடன் தகவல்களைப் பகிர்தல் (பணி நோக்கங்களுக்காகத் தேவைப்படும் அளவில், வர்த்தகத் தொடர்புத் தகவல் போன்ற குறைந்தபட்ச தகவல்களே வாடிக்கையாளர் மற்றும் வர்த்தகக் கூட்டாளருடன் பகிரப்படும்)
- உடல்நலம் மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் தொடர்பான அவசரகால நிலை உள்ளிட்ட சூழல்களுக்குப் பதிலளித்தல்
- ஊழியர்களுடனான தகவல் தொடர்பு மற்றும் அறிவிப்புகளை நிர்வகித்தல்
- ஊழியர் பங்குபெறும் கருத்தாய்வுகள் மற்றும் அறக்கட்டளை பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்
- குறைதீர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட தொழிலாளர் மற்றும் ஊழியர் தொடர்புகளை நிர்வகித்தல்

- மருந்துப் பரிசோதனைகள் உள்ளிட்ட உடல்நல மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் சேவைகளைத் திட்டமிடல் மற்றும் வழங்குதல், தொழிலாளர் ஊதியத்தின் செயலாக்கம் மற்றும் இதுபோன்ற உடல்நலம் மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள்
- உலகளாவிய நிறுவன ஊழியர் எண்ணிக்கை, இடத் தகவல்கள் மற்றும் பொருந்தக் கூடிய சட்டத்தின் மூலம் தேவைப்படக் கூடிய பணி செய்வதற்கான உரிமை, பணியிடச் சூழல், உடல்நல மற்றும் பாதுகாப்பு அறிக்கை மற்றும் நிர்வாகம் போன்ற அறிக்கையிடல்கள் உள்ளிட்ட அறிக்கையிடல் மற்றும் புள்ளிவிவரப் பகுப்பாய்வுகள்
- பின்வருபவை உள்ளிட்ட உடல்நலப் பாதுகாப்பை நிர்வகித்தல்
  - அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு
  - பணியிட அணுகல் மற்றும் பாதுகாப்பு
  - பேரிடர் தயார்நிலை
- கணினி வலையமைப்புகள், மின்னஞ்சல், இணைய அணுகல், நிறுவன வளத் திட்டமிடல் ("ERP") அமைப்புகள் மற்றும் பணியோட்டங்கள் போன்ற தகவல் தொழில்நுட்பங்களை ("IT") நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல், இதில் பின்வருபவையும் அடங்கும்:
  - கணினி மற்றும் பிற அமைப்புகளுக்கான அணுகல் கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு
  - இணையம், அகஇணையம், மின்னஞ்சல் , சமூக ஊடகம் மற்றும் பிற மின்னணு அமைப்பு அணுகல்
  - வைரஸ், ஊடுருவல் மற்றும் தனிநபர் அச்சுறுத்தல் ஸ்கேனிங் மற்றும் பகுப்பாய்வு
  - பாதுகாப்பு மற்றும் உதவிமைய நோக்கங்களுக்காக பதிவுகளின் உருவாக்கம் மற்றும் பகுப்பாய்வு
  - உதவி மைய ஆதரவு மற்றும் அமைப்பு நிர்வாகச் செயல்பாடுகளை வழங்குதல்
  - தரவைக் காப்பெடுத்தல் மற்றும் மீட்டெடுத்தல் மற்றும் அபாய மீட்பு சேவைகளை வழங்குதல்
- குறிப்பிட்ட RTX சொத்துக்கள் மற்றும் சேவைகளின் நிர்வாகத்துக்காக வழங்கப்பட்ட குறிப்பிட்ட பயன்பாடுகள், பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்காக இடமறிதல், காலகட்டம் மற்றும் பிற டெலிமேட்டிக்ஸ்கள்
- இறக்குமதி / ஏற்றுமதிக்கான பதிவுகள் மற்றும் அனுமதிகள், கட்டுப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும்/அல்லது சரக்குகளின் அணுகலைத் தீர்மானித்தல் மற்றும் தடைசெய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நாடுகள் அல்லது தரப்புகளுக்கான பரிசோதனைகள் உள்ளிட்ட இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பிற சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடுகளின் இணக்கத்தை உறுதிசெய்தல்
- RTX குறைதீர்ப்பு ஆணையத் திட்டத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகள் அல்லது குறைகளுக்குப் பதிலளித்தல்
- பொருந்தக்கூடிய கொள்கைகள், ஒழுங்குமுறை மற்றும் சட்டத்துடனான இணக்கத்தை உறுதி செய்வதற்கு தணிக்கைகள் மற்றும் இணக்க மறுஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- கருத்து முரண்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல்
- சட்டம், உலகளாவிய நெறிமுறை மற்றும் இணக்கம் மற்றும் சர்வதேச வர்த்தக இணக்கத்தின் மறுஆய்வுகள் மற்றும் அரசாங்க முகமைகளின் வெளிப்பாடுகள் உள்ளிட்ட உள்புற மற்றும் வெளிப்புற விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிர்வகித்தல்
- சர்ச்சை நடவடிக்கை, ஆதார சேகரிப்பு, கண்டறிதல், நிலுவை வழக்குகள் மற்றும் மின் கண்டறிதல் முயற்சிகள் உள்ளிட்ட சட்ட வழக்குகள், நடுவர் தீர்ப்பாயம், நிர்வாகம் அல்லது ஒழுங்காண்மை வழக்குகளில் வழக்குத் தொடர்தல் மற்றும் இழப்பீட்டுக் கோருதல்களை வாதிடல்
- சட்ட அமலாக்கம் மற்றும் பிற அரசாங்க விசாரணைகளுக்குப் பதிலளித்தல்
- உரிமம் பதிவு செய்தல் உள்ளிட பல அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல்
- ஒருங்கிணைப்புகள், கையகப்படுத்தல்கள் மற்றும் சொத்துக்களை விற்பதற்காகத் திட்டமிடல் அல்லது அவற்றை செயல்படுத்துதல் உள்ளிட்ட வர்த்தகத் திட்டமிடல்கள்
- RTX பங்குகளில் உரிமை கொண்டுள்ள ஊழியர்களுக்கான முதலீட்டாளர் நிர்வாகச் செயல்பாடுகளை ஏற்பாடு செய்தல்
- பொருந்தக் கூடிய சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் மூலம் தேவைப்படுவதற்கு ஏற்ப அல்லது வெளிப்படையாக அங்கீகரிக்கப்படுள்ளபடி

**சேகரிக்கின்ற தகவல்களை RTX யாருடன் பகிர்கிறது?**

ஊழியர் தகவலுக்கான அணுகல் தேவையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு, உலகெங்கிலும் உள்ள நிருவனத்துள்ளே இருக்கக்கூடிய மனிதவளம் மற்றும் ஊதிய நிபுணர்கள், தங்களின் பொறுப்பின் கீழுள்ள பகுதிகளுக்கு தனிப்பட்ட தகவலை அணுக முடியும். குறிப்பிட்ட RTX IT அமைப்புகளில் பணிபுரியும் ஒருசில நபர்களுக்கு இருக்கக்கூடிய உலகளாவிய மனிதவளத் திட்டங்களுக்கான பொறுப்புக்களின் காரணமாக, அவர்களால் எல்லா தனிப்பட்ட தகவல்களையும் அணுகிட முடியும். மேலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள், தங்களின் ஊழியர்களின் பணி தொடர்பான தகவல்களை அணுக முடியும். ஆனால், எல்லா தனிபட்ட தகவல்களையும் அணுகிட முடியாது.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக RTX செயல்பாட்டு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள், உலகளாவிய பிரிவுகள் அல்லது குழுக்களின் மத்தியில் தனிப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுகிறது மற்றும் பகிரப்படுகிறது. வழக்கமான வர்த்தகச் செயல்பாடுகளில் உதவுவதற்காக வாடிக்கையாளர்கள், சாத்தியமான வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக் கூட்டாளர்களுடன் உங்கள் வர்த்தகத் தொடர்புத் தகவல்களைப் பகிரலாம். RTX நிறுவனம் அதன் வர்த்தகங்களின் மத்தியில் உங்கள் தனிப்பட்ட தகவலைப் பரிமாற்றும்போது, பொருந்தக்கூடிய சட்டம் மற்றும் **பெருநிறுவனக் கொள்கைக் கையேடு பிரிவு 24** -இல் உள்ளடக்கப்பட்டுள்ள RTX -யின் **பெருநிறுவன விதிகளுக்கு இணங்குதல்** உள்ளிட்ட RTX -யின் பெருநிறுவனக் கொள்கைக் கையேட்டுக்கு இணங்க அதனை மேற்கொள்ளும்.

கூடுதலாக, நம்பகமான சேவை வழங்குநர்கள், ஆலோசகர்கள் மற்றும் RTX வசதிகள் மற்றும் அமைப்புகளுக்கான அணுகல் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் அரசாங்க முகமைகள் மற்றும் சட்டத்தின் தேவைக்கேற்ப மற்றவர்கள் போன்ற மூன்றாம் தரப்பினர்களுக்கு தேவையின் அடிப்படையில் தனிப்பட்ட தகவல்களின் அணுகலை RTX வழங்கலாம் அல்லது அவர்களுடன் பகிரலாம். பின்வரும் காரணங்களுக்காக மட்டுமே உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX குழுமங்களுக்கு வெளியே RTX பகிரும்:

- RTX, தனது சார்பாகச் சேவைகளை மேற்கொள்வதற்காக சேவை வழங்குநர்களை அனுமதிப்பதற்கு. அத்தகைய சூழல்களில், மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மட்டுமே சேவை வழங்குநர்களிடம் RTX தகவல்களைப் பகிரும். இந்தச் சேவை வழங்குநர்கள், நமது சார்பாக சேவைகளை மேற்கொள்வதற்கு அல்லது சட்டத் தேவைகளுக்கு இணங்குவதற்குத் தேவைப்படும் சூழல்களைத் தவிர பிற சூழல்களில் தகவல்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு ஒப்பந்த ரீதியாக கட்டுப்படுத்தப்படுவர்.
- வரி மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்குதல், தொழிலாளர்/வர்த்தகச் சங்கங்கள் மற்றும் பணிக் கவுன்சில்களுடன் தரவுகளைப் பகிர்தல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கை அல்லது சட்ட அமலாக்க ஆணையங்கள் அல்லது பிற சட்ட ஒழுங்குமுறை ஆணையங்களின் சட்ட கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல் போன்ற பல சட்ட விதிமுறைகளுக்கு இணங்குதல்
- சந்தேகத்துக்கு இடமான அல்லது உண்மையான சட்ட விரோத நடவடிக்கையை விசாரித்தல்
- உடல் காயம் அல்லது நிதி இழப்பைத் தடுத்தல்
- நமது வர்த்தகம் அல்லது சொத்துக்களின் (திவால் உள்பட) ஒரு பகுதியையோ அல்லது முழுமையுமோ விற்பதை அல்லது பரிமாற்றுவதை ஆதரித்தல்

**உங்கள் தனிப்பட்ட தகவலை RTX எங்கு சேமிக்கிறது?**

பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள ஓர் உலகளாவிய நிறுவனமாக RTX இருப்பதால், மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நாங்கள் உங்கள் தகவல்களை ஒரு சட்ட நிறுவனத்தில் இருந்து மற்றொன்றிற்கோ அல்லது ஒரு நாட்டில் இருந்து மற்றொரு நாட்டிற்கோ பரிமாற்றலாம். இந்த நாடுகள் அமெரிக்கா, மெக்ஸிகோ, கனடா மற்றும் ஐரோப்பாவில் உள்ள பல நாடுகள் மற்றும் ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்றவை உள்ளிட்ட பல நாடுகளை உள்ளடக்குகிறது. நாங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை பொருந்தக்கூடிய சட்டத் தேவைகளுக்கு இணங்க பரிமாற்றுவோம் மற்றும் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கான தேவை வரம்பு வரை மட்டுமே பரிமாற்றுவோம்.

தனிப்பட்ட தகவல்களை எல்லைகளைத் தாண்டி பரிமாற்றுவதற்கு உதவுவதற்கு, கிடைக்கப்பெறக்கூடிய சட்ட முறைமைகளை RTX நம்பியுள்ளது. பரிமாற்றத்தை அங்கீகரிப்பதற்கு தரநிலையான ஒப்பந்த விதிகள் (மாதிரி உட்பிரிவுகள் எனவும் அழைக்கப்படுகிறது) அல்லது பெருநிறுவன விதிகளுக்கு இணங்குதலை RTX நம்பியுள்ளது மற்றும் அந்தத் தேவைகளுக்கும் இந்த அறிக்கைக்கும் இடையே முரணாக இருக்கக்கூடிய தேவைகளுக்கு RTX இணங்கிடும். RTX -யின் **பெருநிறுவன விதிகளுக்கு இணங்குதல்** என்பதைப் பற்றி அறிய **http://www.rtx.com/Privacy** -இல் உள்ள டிராப்டவுன் மெனுவை பயன்படுத்தவும்.

**உங்கள் தனிப்பட்ட தகவல்களை RTX எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்து உங்களுக்கு இருக்கக் கூடிய விருப்பத் தேர்வுகள் என்ன?**

RTX -யின் உலகளாவிய மனிதவள மேலாண்மைக்கு உங்கள் தனிப்பட்ட தகவல்கள் முக்கியமானவை. முடிவாக, உள்நாட்டுச் சட்டம், கூட்டுப் பேரம் அல்லது RTX -யால் ஒப்புக்கொள்ளப்படும் பணிக் கவுன்சில் கட்டுப்பாடுகளுக்கு முரணாக இல்லாதவரை, இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளவாறு உங்கள் தனிப்பட்ட தகவல்களின் பயன்பாடு என்பது உங்கள் பணிக்குப் பொதுவாகத் தேவையானதே. உங்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு, உங்கள் பணியை நிர்வகிப்பதற்கு, வரிச் சட்டங்கள் மற்றும் இணக்க ஒழுங்குமுறைகள் போன்ற சட்டக் கடப்பாடுகளுக்கு இணங்குவதற்கு உங்கள் தனிப்பட்ட தகவல்கள் தேவை.

நீங்கள் பணி செய்கின்ற இடத்தைச் சார்ந்து, உள்நாட்டுச் சட்டத்தின்படி குறிப்பிட்ட சூழல்களில் தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்பு, பயன்பாடு மற்றும்/அல்லது வெளிப்பாடுக்கு உங்களின் ஒப்புதல் தேவைப்படலாம். அவ்வாறு தேவைப்படும் இடங்களில், பொருத்தமான மற்றும் அனுமதிக்கப்பட்ட வகைகளில் உங்கள் ஒப்புதலை RTX கேட்டிடும்.

**தனிப்பட்ட தகவல்களை RTX எவ்வளவு காலம் தக்கவைக்கிறது?**

உங்கள் பணிக்காலம் வரையிலும் மற்றும் பொருந்தக்கூடிய சட்டம் அல்லது ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாகம் அல்லது நடுவர் தீர்ப்பாய நடவடிக்கைகள் அல்லது தணிக்கைத் தேவைகள் போன்றவற்றின் தேவைக்கேற்ப கூடுதல் காலகட்டத்துக்கும் உங்கள் மனிதவளத் தனிப்பட்ட தகவல்களை RTX தக்கவைக்கிறது. உங்கள் மனிதவளத் தகவல்கள் குறித்த மேலதிக குறிப்பிட்ட தகவல்களுக்கு, உங்கள் உள்ளூர் மனிதவளத் துறைப் பிரதிநிதியை தொடர்பு கொள்ளுங்கள்.

இல்லையென்றால், பின்வரும் பல நோக்கங்களுக்காக வர்த்தகம் மற்றும் சட்ட நோக்கங்களின் தேவைக்கேற்ப RTX தரவுகளைத் தக்கவைக்கலாம்: (a) சட்டப்பூர்வ வர்த்தக நோக்கங்களுக்காக தேவைப்படும் தரவுகள், உதாரணத்திற்கு வாடிக்கையாளர்களுடன் கோப்புகள், சேவைகள், தொழில்நுட்பங்கள், வர்த்தகப் பங்காளிகளுடன் பணிபுரிவதற்கு, உங்கள் தகவல்களை உள்ளடக்கிய பிற பணி சார்ந்த விஷயங்களுக்கு; (b) பொருந்தக் கூடிய தக்கவைப்பு காலத்துக்கு உட்பட்ட பகிரப்பட்ட சேமிப்பக இடங்களில் நீங்கள் சேமித்த தரவுகள்; (c) செயலுறு சட்ட விசாரணை, நீதிமன்ற அல்லது நிர்வாக ஆணையத்தின் நடவடிக்கை, தணிக்கை அல்லது பிற சட்ட தேவைகளுக்கு உட்பட்ட தரவுகள் (d) ஒப்பந்தரீதியாக, சட்ட ரீதியாக, ஒழுங்குமுறை அல்லது தணிக்கை கடப்பாடுகளின் கீழ் RTX தக்கவைக்க வேண்டிய தரவுகள்.

**குறிப்பிட்ட ஊழியர்கள் அறியவேண்டிய கூடுதல் தகவல்கள் என்னென்ன?**
**தனியுரிமை விதிகள் கொண்ட EU மற்றும் கொலம்பியா, செர்பியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற பிற நாடுகளில் உள்ள ஊழியர்கள்:** நீங்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகவோ, திருத்தவோ அல்லது அழிக்கவோ அல்லது அவற்றின் மீது கட்டுப்பாடுகளைக் கோரவோ அல்லது குறிப்பிட்ட தனிப்பட்ட தகவல்களை செயலாக்குவதற்கு ஆட்சேபம் தெரிவிக்கவோ அல்லது குறிப்பிட்ட சூழல்களின் கீழ் தரவு பரிமாற்றத்தைக் கோரவோ உரிமை உள்ளது. உங்கள் தரவை அணுக, திருத்த, அழிக்க, ஆட்சேபிக்க அல்லது கட்டுப்பாடுகளைக் கோர அல்லது பரிமாற்றத்தைக் கோருவதற்காக RTX -ஐ தொடர்பு கொள்வதற்கு, இந்த அறிக்கையின் முடிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் தொடர்பு முறைகளைப் பயன்படுத்திடுங்கள். உங்கள் தேசிய அல்லது மாநிலத் தரவுப் பாதுகாப்பு ஆணையத்தில் நீங்கள்

புகாரளிப்பதற்கு உரிமையுள்ளது. இது மேற்பார்வை அதிகாரம் என்றும் அறியப்படுகிறது. உங்கள் தேசிய அல்லது உள்நாட்டு அரசாங்க ஒழுங்குமுறை ஆணையங்களின் தொடர்புத் தகவல்களை உள்ளடக்கிய துணை ஆவணமும் உங்களுக்கு வழங்கப்படலாம். உங்கள் தரவுப் பாதுகாப்பு அதிகாரத்தை அடையாளம் காண்பதற்கு உங்களுக்கு உதவி தேவைப்படும் பட்சத்தில், (privacy.utc.com -இல் பட்டியலிடப்பட்டுள்ள)உங்கள் தனிப்பட்ட நிபுணர் அல்லது தரவுப் பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**அமெரிக்காவில் வசிக்கும் ஊழியர்கள்** வரி மற்றும் ஊதிய நோக்கங்களுக்காக, சட்டத்தால் தேவைப்படும் இடங்களில் சமூகப் பாதுகாப்பு எண்களை (சோஷியல் செக்யூரிட்டி நம்பர்) RTX சேகரிக்கிறது. சமூகப் பாதுகாப்பு எண்களை RTX சேகரிக்கும்போது மற்றும்/அல்லது பயன்படுத்தும்போது, அதன் இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல், சேகரிப்பைக் கட்டுப்படுத்துதல், தேவைக்கேற்ற அணுகலை உறுதி செய்தல், பொருத்தமான தொழில்நுட்பப் பாதுகாப்புகளைச் செயல்படுத்துதல் மற்றும் முறையான அகற்றத்தை உறுதி செய்தல் போன்றவற்றின் மூலம் முறையான அக்கறையை RTX மேற்கொண்டிடும்.

**தங்களின் குடும்பத்தினர்கள் மற்றும் மற்றவர்கள் குறித்த தகவலைப் பகிரும் ஊழியர்கள்:** அவசரகால தொடர்புத் தகவல்களுக்கு, கிடைக்கப்பெறும் நலன்கள் கொண்டு சார்ந்துள்ளவர்களைக் காப்பீடு செய்வதற்கு மற்றும் பயனாளிகளை அடையாளம் காண்பதற்கு, நீங்கள் உங்கள் குடும்பத்தினர்கள் மற்றும் உங்களுடன் தொடர்புடைய மற்றவர்கள் குறித்த தகவல்களை RTX க்கு நீங்கள் வழங்குவது விருப்பத் தேர்விலானது. RTX -க்கு அந்தத் தகவல்களை வழங்குவதற்கு முன்பு, அவ்வாறு செய்வதற்கு உங்களுக்கு சட்ட அனுமதி உள்ளதா என்பதை நீங்கள் உறுதி செய்துகொள்ள வேண்டும். பதினெட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சட்டப் பிரதிநிதியாக தகவலை வழங்கும் வகையில், அவை வழங்கப்பட்டதற்கான நோக்கங்களுக்கு ஏற்ப மற்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு ஏற்ப அவற்றை சேகரிக்கவும், செயலாக்கவும் பரிமாற்றவும் நீங்கள் RTX -க்கு ஒப்புதலளிக்கிறீர்கள்.

**உங்கள் தனிப்பட்ட தகவல்களின் அணுகல், திருத்தம், மாற்றம் அல்லது நீக்கம் அல்லது நகலுக்கான கோருதலை நீங்கள் எவ்வாறு செய்யமுடியும்?**

பல்வேறு RTX HR அமைப்புகளில் உள்ள தங்களின் பெரும்பாலான தனிப்பட்ட தகவல்களை பெரும்பாலான ஊழியர்கள் நேரடியாக அணுகிட முடியும் மற்றும் அவர்கள் அந்த நேரடி அணுகலைப் பயன்படுத்தி தங்களின் தனிப்பட்ட தகவல்களை அணுகவும், திருத்தவும், மாற்றவும், நீக்கவும் அல்லது நகலெடுக்கவும் முடியும். தனிப்பட்ட ஊழியர்களின் கோரிக்கையின் பேரில், அவர்களின் அணுக இயலாத தனிப்பட்ட தகவல்களுக்கான நியாயமான அணுகலை RTX அவர்களுக்கு வழங்கலாம். நேரடி அணுகல் இல்லாத அல்லது கூடுதல் அணுகல் தேவைப்படும் ஊழியர்கள், தங்களின் உள்நாட்டு HR பிரதிநிதியைத் தொடர்பு கொள்ள வேண்டும். மனிதவளத் தரவுகளுக்கு அப்பாற்பட்ட உங்கள் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பான கோரிக்கைகளுக்கு, உங்கள் உள்நாட்டு நெறிமுறைகள் மற்றும் இணக்க அதிகாரி, உங்கள் தரவுப் பாதுகாப்பு அதிகாரி அல்லது உங்கள் தனியுரிமை நிபுணரைத் தொடர்பு கொள்ளுங்கள் (கூடுதல் விவரங்களுக்கு கீழே பார்க்கவும்). அணுகல், திருத்தம், மாற்றம், நீக்கம் அல்லது நகலைப் பெறுவதற்கான கோரிக்கை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிக்கப்படுவதற்கு, சட்டரீதியான அல்லது பிற காரணங்கள் இருக்கலாம்.

**RTX -ஐ நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்ள முடியும்?**

உங்கள் தனிப்பட்ட தகவல் குறித்த கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தாலோ அல்லது உங்கள் தனிப்பட்ட தகவல்களின் தரவுக் கட்டுப்பாட்டாளர்களாக எந்த RTX நிறுவனங்கள் உள்ளன என்பது குறித்த தகவலை அறிய விரும்பினாலோ, நீங்கள் உங்கள் உள்நாட்டு HR பிரதிநிதி, உள்நாட்டு நெறிமுறை மற்றும் இணக்க அதிகாரி, குறைதீர்ப்பு திட்டம் அல்லது உங்கள் தனியுரிமை நிபுணர் அல்லது தரவுப் பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்புகொள்ள வேண்டும். குறைதீர்ப்பு திட்டத்தை நீங்கள் பின்வருவதில் தொடர்பு கொள்ளலாம்:

| இணையம் | https://www.rtx.com/Our-Company/ethics-and-compliance |
|---|---|
| அஞ்சல் | Raytheon Technologies Corporation, Attention: Ombudsman Program<br>10 Farm Springs Road<br>Farmington, CT 06032 USA |

தனியுரிமை நிபுணர்கள் மற்றும் தரவுப் பாதுகாப்பு அதிகாரிகளின் பட்டியல் பின்வரும் இணையபக்கத்தில் உள்ளது privacy.utc.com. RTX தனியுரிமை அலுவலகத்தை நீங்கள் பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம் privacy.compliance@rtx.com. நெறிமுறை மற்றும் இணக்க அதிகாரிகளின் பட்டியல் பின்வரும் இணையபக்கத்தில் உள்ளது https://www.rtx.com/Our-Company/ethics-and-compliance.

**கடைசியாக கடைசியாகத் திருத்தியது:** அக்டோபர் 14, 2020